بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

அல்லாஹ் தனது நண்பர்களையும், நன்மைகளில் நிலைத்திருக்கின்ற அவர்களது சந்ததிகளையும் பாதுகாக்கின்றான். அவர்களுக்கு தன் தரப்பிலிருந்து வழங்குகின்றான். நிபந்தனை என்னவென்றால் அந்த சந்ததிகள் நன்மைகளில் நிலைத்திருப்பவர்களாக இருக்க வேண்டும். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய நூல்களை குறிப்பாக நாம் படிக்க வேண்டும். இதன் மூலமாகவே நமது மார்க்க அறிவு வளரும். இதன் மூலமாகவே தப்லீக்கிற்கான ஆர்வமும் நம்மிடம் ஏற்படும். நமது அறிவில் பரக்கத்தும் ஏற்படும். அதன் மூலம் உலகை இஸ்லாத்தின் கொடியின் கீழ் நாம் ஒன்று சேர்க்க முடியும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15.01.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

**அல்லாஹ் தனது நண்பர்களையும், நன்மைகளில் நிலைத்திருக்கின்ற அவர்களது சந்ததிகளையும் பாதுகாக்கின்றான். அவர்களுக்கு தன் தரப்பிலிருந்து வழங்குகின்றான். நிபந்தனை என்னவென்றால் அந்த சந்ததிகள் நன்மைகளில் நிலைத்திருப்பவர்களாக இருக்க வேண்டும்.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கான உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

பாருங்கள் ! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நபித்துவத்தின் ஆரம்ப நாட்களில் தங்களது குடும்பத்திலுள்ள மக்களை அவர்களுக்கு உண்மையின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக விருந்திற்கு அழைத்தார்கள். அம்மக்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பெருமானார் (ஸல்) அவர்கள் எட்ட வைத்தார்கள். அதைக்கேட்டு சபையிலிருந்த அனைவருமே மிகவும் அமைதியுடன் இருந்தனர். எவருமே பேசவில்லை. இறுதியில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். பிறகு இந்த சபையிலுள்ள அனைவரையும் விட நான் வயதில் சிறுவனாக இருந்தாலும் நீங்கள் எதைப்பற்றி இப்போது கூறினீர்களோ அவ்விஷயத்தில் நான் உங்களுடன் இணைந்து செயல்பட தயாராக இருக்கின்றேன். அவ்வாறு நான் உங்களுடன் இணைந்திருப்பேன் என்று உறுதிமொழி கூறுகின்றேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்குப் பிறகு மக்காவில் எதிர்ப்பு அதன் இறுதி எல்லையை அடைந்தது. இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அங்கிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வந்தது. அந்த சமயத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கே அல்லாஹ் பெரும் தியாகத்தை செய்வதற்கான நல்வாய்ப்பைத் தந்தான். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை தமது படுக்கையில் படுக்க வைத்தார்கள். மேலும் நீங்கள் இங்கேயே படுத்திருங்கள். அதன் மூலம் எதிரிகள் நான் தான் இங்கு படுத்திருக்கின்றேன் என்று நினைத்து கொள்வர் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த சமயத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! எதிரிகள் வெளியில் நம்மை சூழ்ந்து நிற்கின்றார்கள். காலையில் இது பற்றி அவர்களுக்கு தெரிந்ததும் என்னை அவர்கள் கொலை செய்து விடலாம் என்று கூறவில்லை. மாறாக, மிகவும் நிம்மதியுடனும் அமைதியுடனும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது படுக்கையில் படுத்த உறங்கி விட்டார்கள். காலையில் காஃபிர்களுக்கு இதைப்பற்றி தெரிய வந்ததும் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அதிகமாக அடிக்கவும் உதைக்கவும் செய்தனர். ஆனால் எப்படியிருப்பினும் அந்த சமயத்திற்குள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த தியாகம் அவர்களுக்கு எந்த அளவிற்கு அதிகமான அருட்கொடையை பிறகு அவர்களுக்கு வழங்கியது. இந்த அளவு இறைவன் அவர்களுக்கு வழங்குவான் என்பதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களே அப்போது அறிந்திருக்கவில்லை.

இந்த தியாகத்திற்குப் பகராக அவர்களுக்கு எந்த அளவிற்கு கண்ணியம் கிடைக்கப் போகின்றது என்பதை பற்றிய அறிவு அப்போது அல்லாஹ்விற்கு மட்டுமே இருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு மட்டுமல்லாமல் அவர்களது சந்ததிகளுக்கும் கூட அல்லாஹ் கண்ணியத்தை வழங்குவான் என்பது அப்போது எவருக்கும் தெரியாமல் இருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீது அல்லாஹ் செய்த முதல் அருள், அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மருமகனாக இருக்கின்ற நற்பேறு கிடைத்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் செய்த பல்வேறு பணிகளை புகழ்ந்து கூறியுள்ளார்கள். ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்காக ஓரிடத்திற்கு சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை மதீனாவில் இருக்குமாறு அன்னார் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! நீங்கள் என்னை பெண்களுடனும், குழந்தைகளுடனும் விட்டு விட்டு செல்கின்றீர்களா ? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அலியே ! ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களுடன் இருந்த தொடர்பை போன்று உங்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா ? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தனக்குப் பின்னால் ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களை விட்டு விட்டு சென்றதால் ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களின் கண்ணியம் குறைந்து விடவில்லை. அவ்வாறே, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது கண்ணியத்தையும் அல்லாஹ்

நிலைநாட்டினான். அவர்களது கண்ணியத்தை மட்டுமல்ல. மாறாக, இஸ்லாத்திலுள்ள பெரும்பாலான வலிமார்களும், சூஃபிகளும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது சந்ததிகளிலிருந்து வந்தவர்களாக உள்ளனர். இந்த வலிமார்களுக்கும் அல்லாஹ் தஆலா தன் தரப்பிலிருந்து அற்புதங்களையும் தனது உதவியையும் வழங்கி இருந்தான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி கூறுகின்றார்கள்:

நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து ஒரு சம்பவத்தை கேட்டுள்ளேன். அந்த சம்பவம் இதுவாகும். மன்னர் ஹாரூன் ரஷீது அவர்கள் இமாம் மூஸா ரிஸா அவர்களை ஏதோ ஒரு காரணத்திற்காக கைது செய்திருந்தார். மேலும் இமாம் அவர்களது கைகளையும் கால்களையும் கயிறால் கட்டிப் போட்டார். மன்னர் ஹாரூன் ரஷீது அவர்கள் தமது படுக்கையில் சுகமாக தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது கனவில் தோன்றினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களது முகத்தில் கோபத்தின் அறிகுறிகள் தென்பட்டன. பெருமானார் (ஸல்) அவர்கள் கனவில் அவரிடம், ஹாரூன் ரஷீதே ! நீ என் மீது அன்பு வைத்திருப்பதாக வாதம் செய்கின்றாய். ஆனால் உங்களுக்கு வெட்கமாக இல்லையா ? நீங்களோ சுகமான படுக்கையில் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கின்றீர்கள். ஆனால் நமது மகனோ கடுமையான வெப்பத்தை தாங்கிக் கொண்டு கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் கிடக்கின்றார் என்று கூறினார்கள். இந்த காட்சியைக் கண்டு ஹாரூன் ரஷீது சஞ்சலமடைந்து விழித்தெழுந்தார். தமது தளபதியை அழைத்துக் கொண்டு அதே சிறைச்சாலைக்கு சென்றார். தமது கைகளாலேயே இமாம் மூஸா ரிஸா அவர்களது கைகளிலும், கால்களிலும் கட்டப்பட்டிருந்த கயிறுகளை அவிழ்த்தார். இமாம் அவர்கள் ஹாரூன் ரஷீதிடம், நீங்கள் என்னை எதிர்த்து வந்தீர்கள். இப்போது என்ன நடந்தது. நீங்களே நடந்து இங்கு வந்திருக்கின்றீர்களே. இதற்கு என்ன காணரம் ? என்று கேட்டார். ஹாரூன் ரஷீது அவர்கள், தான் கண்ட கனவை இமாமிடம் கூறி நான் உங்களிடம் மன்னிப்பை வேண்டுகின்றேன். எனக்கு உண்மையான நிலைமை தெரியாது என்று கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:

அந்த காலத்திற்கும் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களது காலத்திற்கும் இடையில் எவ்வளவு பெரிய கால இடைவெளி இருந்திருக்கின்றது. நாம் பல மன்னர்களின் சந்திகளையும் பார்த்துள்ளோம். அவர்கள் பல இடங்களுக்கும் மாறி மாறி சென்று இன்னல்களுக்கு ஆளாகின்றனர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது சந்ததிகளைப் பாருங்கள். இவ்வளவு தலைமுறை கடந்து சென்ற பிறகும் கூட இறைவன் ஒரு மன்னரை கனவில் எச்சரிக்கை செய்கின்றான். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது சந்ததிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளும் படியும் வலியுறுத்திக் கூறுகின்றான். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு தனக்கு வழங்கப்பட இருக்கும் இந்த கண்ணியத்தைப் பற்றி தெரிந்திருந்தால் மேலும் அவர்களுக்கு மறைவான செய்திகள் பற்றிய அறிவு இருந்திருந்தால் இந்த கண்ணியம் கிடைப்பதற்காக மட்டும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்களது அந்த ஈமான் வெறுமனே வியாபாரமாக ஆகியிருக்கும். அந்த ஈமான் எந்தவொரு அருட்கொடை கிடைப்பதற்கும் காரணமாக ஆகி இருக்காது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் ஒரு இறை நேசரைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அதாவது அந்த இறை நேசர் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். கடலில் புயல் அடித்தது. கப்பல் மூழ்கி விடும் அபாயம் இருந்தது. இறுதியில் அந்த இறை நேசரின் துஆவின் காரணமாக கப்பல் புயலிலிருந்து காப்பாற்றப்பட்டது. அந்த பெரியவர் துஆ செய்த சமயத்தில் அவருக்கு உனக்காக நாம் எல்லோரையும் காப்பாற்றி விட்டோம் என்று இல்ஹாம் வந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த விஷயங்கள் எல்லாமல் வெறும் வாய்ப்பேச்சுக்களால் நடந்து விட முடியாது. மாறாக, இதற்காக உழைக்க வேண்டியது வரும். அல்லாஹ்வுடன் தொடர்பை நிலைநாட்ட வேண்டியது வரும். மூதாதையர்கள் செய்த நன்மைகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டியது வரும். எனவே, நல்லவர்களின் சந்ததிகளாக இருப்பது அல்லது பெரியவர்கள் மற்றும் வலிமார்களின் சந்ததிகளாக இருப்பது எப்போது பயன் அளிக்கும் என்றால் சுயமே மனிதனும் அந்த நன்மைகளில் நிலைத்திருக்கும் போது தான் அதனால் பலன் பெற முடியும். அல்லாஹ்வுடன் அவர்களுக்கு தொடர்பு இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக கூறியுள்ள ஏனைய சில விஷயங்களையும் இப்போது நான் எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தாக தொழுவதை எந்த அளவு பேணி வந்தார்கள் என்பது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தொழுகை எந்த அளவிற்கு பிரியமானதாக இருந்ததென்றால், நோயின் காரணமாக அவர்களுக்கு தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வர முடியாத நிலையில் வீட்டில் தொழ வேண்டியது வந்தால் தாயார் அல்லது வீட்டிலுள்ள குழந்தைகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு அன்னார் ஜமாஅத்தாக தொழுது வந்தார்கள்.** அதாவது அவர்கள் வெறுமனே தொழுகையை நிறைவேற்றவில்லை. மாறாக, ஜமாஅத்தாக தொழுது வந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஜமாஅத்தாக தொழுவதன் முக்கியத்துவம் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: எல்லா மனிதர்களையும் ஓர் உயிரைப் போன்று ஆக்கிவிட வேண்டும் என்பது அல்லாஹ்வின் நாட்டமாகும்.

இதற்கே ஜனநாயக ஒற்றுமை என்று பெயராகும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: மார்க்கத்தின் நோக்கமும் இதுவேயாகும். தஸ்ஃபீஹிலுள்ள மணிகளைப் போன்று ஜனநாயக ஒற்றுமை என்ற நூலில் அனைவரும் ஒன்றாக கோர்க்கப்பட வேண்டும். (அதாவது மார்க்கம் என்பது அனைவரையும் ஒன்றுபடுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்). ஜமாஅத்தான தொழுகையும் கூட இந்த நோக்கத்திற்காகவே இருக்கின்றது. அதாவது எல்லா தொழுகையாளிகளும் ஒரு நபர் போன்று ஆகிவிட வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் இணைந்து நிற்க வேண்டும் என்ற கட்டளை கூறப்பட்டிருப்பதன் நோக்கம் எவரிடம் அதிகமாக ஒளி இருக்கின்றதோ அது பலகீனமானவர்களிடம் ஊடுருவி அவருக்கு ஆற்றலை வழங்க வேண்டும். இதற்காகவே அல்லாஹ் இந்த கட்டளையை பிறப்பித்துள்ளான். (அதாவது தொழுகையின் மூலம் ஒருவர் மற்றவரிடமிருந்து ஆற்றலைப் பெற வேண்டும்). எல்லா ஒளிகளும் ஒன்று சேர்ந்து பலகீனத்தை அகற்ற வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் அறிமுகம் ஏற்பட்டு அன்பு உருவாக வேண்டும்.

கூறுகின்றார்கள்: அறிமுகமாவது மிகவும் சிறந்த விஷயமாகும். இதன் காரணமாக அன்பு வளர்கின்றது. அதுவே ஒற்றுமையின் அடித்தளமாக இருக்கின்றது.

எனவே, ஜமாஅத்தாக தொழுவதன் மூலம் எங்கு மனிதனுக்கு சுயமாகவும் பலன் கிடைக்கின்றதோ அங்கு ஜமாஅத் அளவிலான பலனும் கிடைக்கின்றது. **சிலர் பள்ளிவாசலுக்கு வருவதில்லை. சிலர் பள்ளிவாலுக்கு வந்து தமக்கும் மற்றவர்களுக்கும் இடையிலுள்ள பகைமை உணர்வை அகற்றி அன்பை உருவாக்குவதில்லை. அவர்களுக்கு அவர்கள் தொழும் தொழுகைகள் எந்த பலனையும் தராது. ஏனென்றால், தொழுகையின் நோக்கமானது இறைவனை வணங்குவதைத் தவிர ஒற்றுமையை உருவாக்குவதும் ஆகும். அந்த குறிக்கோள் ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்ளாமல் கிடைக்க முடியாது.** இந்த சிந்தனையுடன் நாம் நமது தொழுகைகளை பாதுகாக்கவும் வேண்டும். இந்த சிந்தனையுடன் நாம் பள்ளிவாசலுக்கு வர வேண்டும். அதாவது நாம் ஒன்றாக ஆகி அல்லாஹ்வின் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தொழுகைகளை தொழக் கூடியவர்களாகவும் அவனது திருப்தியைப் பெறக் கூடியவர்களாகவும் ஆகிவிட வேண்டும்.

தொழுகையை தொழாமல் விட்டு விட்டது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதாக இந்த சம்பவத்தை கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எங்களுக்கு இந்த சம்பவத்தை கூறி வந்தார்கள். அதாவது ஒரு முறை ஹஸ்ரத் முஆவிய்யா அவர்களுக்கு சுபுஹ் தொழுகை நேரத்தில் கண்விழிக்க முடியாமல் போய் விட்டது. அவர்கள் கண் விழித்த சமயத்தில் தொழுகைக்கான நேரம் கடந்து சென்று விட்டதை பார்த்தார்கள். இதற்காக அவர்கள் அந்த முழு நாளும் அழுது கொண்டே இருந்தார்கள். மறுநாள் அவர்கள் கனவில் பார்த்தார்கள். ஒரு மனிதர் வந்து அவர்களை தொழுகைக்காக தட்டி எழுப்புகின்றார். அவர்கள் அவரிடம், நீ யார் ? என்று கேட்டதற்கு அவர் நான் ஷய்த்தான் என்றார். மேலும் தொழுகைக்காக உங்களை எழுப்புவதற்காகவே நான் வந்துள்ளேன் என்று கூறினார். தொழுகைக்காக எழுப்புவதற்கும் உனக்கும் என்ன தொடர்பு உள்ளது ? என்று அமீர் முஆவிய்யா அவர்கள் கேட்டார்கள். அதற்கு நேற்று நான் நீங்கள் தூங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என உங்களை நான் தூண்டினேன். நீங்களும் தூங்கிக் கொண்டே இருந்தீர்கள். அதனால் உங்களால் தொழ முடியவில்லை. இதற்காக நீங்கள் முழு நாளும் அழுது கொண்டே இருந்தீர்கள். கவலைப்பட்டுக் கொண்டே இருந்தீர்கள். இவ்வாறு அவர் அழுததன் காரணமாக அவருக்கு ஜமாஅத்தாக தொழுவதனால் கிடைப்பதை விட பல மடங்கு நற்கூலியை வழங்கும்படி அல்லாஹ் கூறினான். எனக்கு இதனால் மிகுந்த வேதனை ஏற்பட்டது. தொழுகையிலிருந்து உங்களை விலக்கி வைத்ததன் காரணமாக உங்களுக்கு மேலும் அதிகமாக நற்கூலி கிடைத்து விட்டதே என்ற வேதனை எனக்கு இருக்கின்றது என்று ஷய்த்தான் கூறினான். எனவே, இன்றும் உங்களுக்கு அதிகமான நற்கூலி கிடைத்து விடக்கூடாது என்பதற்காகவே உங்களை எழுப்புவதற்காகவே நான் வந்துள்ளேன் என்றும் ஷய்த்தான் கூறினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷய்த்தான் கூறுகின்ற விஷயத்தை மனிதன் மறுத்தால் தான் அவனுக்கு பின்னால் வருவதை ஷய்த்தான் விட்டு விடுகின்றான். அந்த மனிதனிடமிருந்து அவநம்பிக்கை அடைந்து அவனை விட்டு விட்டு சென்று விடுகின்றான். எனவே நாமும் ஷய்த்தானை அவநம்பிக்கை அடையச் செய்து அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு நமது சக்தி உள்ள அளவு முயற்சி செய்ய வேண்டும். அவனது கட்டளைக்கேற்ப செயல்பட முயற்சி செய்ய வேண்டும். நமது தொழுகைகளை பாதுகாக்க வேண்டும். குறித்த நேரத்தில் தொழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**சில சந்தர்ப்பங்களில் சிலர் அவசரப்பட்டு எந்தவொறு விஷயத்தையும் ஆழமாக சிந்திக்காமல் அது தொடர்பாக தமது கருத்தை கூறி விடுகின்றனர். பிறகு பலகீனமான இயல்பை உடைய சிலர் இதனால் தடுமாற்றத்திற்கு ஆளாகி விடுகின்றனர்.**

ஒரு சம்பவத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு விருந்தில் ஒரு நபர் இடது கையால் தண்ணீர் குடிப்பதை பார்த்த நான் அவரை அவ்வாறு செய்வதிலிருந்தும் தடுத்தேன். ஆகுமான காரணம் எதுவும் இல்லையென்றால் வலது கையால் தண்ணீர் குடிக்குமாறு அவரிடம் கூறினேன். அதற்கு அந்த நபர், ஹஸ்ரத் சாஹிப் (அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்) இடது கையால் தண்ணீர் குடித்துள்ளார்கள் என்று கூறினார். ஆனால், ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் அவ்வாறு செய்வதற்கான ஒரு காரணம் இருந்தது. அது என்னவென்றால், சிறு வயதில் அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். அதன் காரணமாக வலது கையில் காயம் ஏற்பட்டது. கை எந்த அளவு பலகீனமாக இருந்ததென்றால் அதனைக் கொண்டு டம்ளரை அவர்களால் எடுக்க முடியும். ஆனால் அதை

வாய் வரை கொண்டு செல்ல முடியாது. ஆனால் அவர்கள் சுன்னத்தை பின்பற்றாமல் இருக்கவில்லை. அவர்கள் இடது கையால் டம்ளரை எடுத்தாலும் வலது கையையும் துணைக்கு அதன் கீழே வைத்துக் கொள்வார்கள்.

தவக்குல் அதாவது இறை நம்பிக்கை தொடர்பாக இன்னொரு சம்பவத்தை கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து கேட்ட ஒரு விஷயத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

சுல்தான் அப்துல் ஹமீது கான் கூறிய ஒரு விஷயம் எனக்கு மிகவும் பிடித்தமானதாகும். கிரேக்க நாட்டுடன் போர் செய்ய வேண்டும் என்று கூறப்பட்ட போது அதை மறுத்து அவரது அமைச்சர்கள் பல காரணங்களை அவருக்க எடுத்துக் கூறினர். உண்மையில் போர் நடக்க வேண்டும் என்பதே அரசர் அப்துல் ஹமீது கான் அவர்களது நாட்டமாக இருந்தது. ஆனால் அமைச்சர்களுக்கு அதில் விருப்பமில்லாமல் இருந்தது. அதன் காரணமாக இன்னின்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் குறிப்பாக முக்கியமாக தேவைப்படும் இந்த ஏற்பாடு இல்லை என்று காரணம் கூறினர். அந்த முக்கிய தேவையானது போருக்கு மிகவும் அவசியமானது என்று அமைச்சர்கள் கூறினர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அமைச்சர்கள் தங்களது ஆலோசனைகளை கூறிய பிறகு தங்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துக் கூறிய பிறகு மேலும் இந்த முக்கியமான ஏற்பாடு இல்லாமல் இருக்கின்றது என்று கூறிய பிறகு அரசர் அப்துல் ஹமீது அதற்கு இவ்வாறு பதில் கூறினார். **ஏதாவது ஒரு வெற்றிடத்தை இறைவனுக்காகவும் காலியாக விட்டுவிட வேண்டும்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சுல்தான் அப்துல் ஹமீது கான் கூறிய இந்த சொற்றொடரை கூறி அதை மிகவும் ரசித்து வந்தார்கள். மேலும் அவர் கூறிய இந்த விஷயம் எனக்கு மிகவும் பிடித்தமானது என்று கூறினார்கள். எனவே நம்பிக்கை கொண்டவர் தமது முயற்சிகளில் ஓர் வெற்றிடத்தை இறைவனுக்காகவும் விட்டு வைக்க வேண்டும்.

பொதுவாக இங்கும் கூட இளைஞர்களின் மூளையில் இதுபோன்ற கேள்விகள் அவ்வப்போது எழுகின்றன. அதாவது முன்னேற்றம் அடைந்துள்ள சமுதாயங்கள் இறைவனை விட்டு தொலைவில் விலகிச் சென்றதன் காரணமாகவே ஒருவேளை முன்னேறுகின்றதோ என்ற எண்ணம் வந்துள்ளது. மேலும் முஸ்லிம்கள் மார்க்கத்தின் காரணமாகவே வீழ்ச்சிக்கு இரையாவதாக அவர்கள் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் முஸ்லிம்கள் தங்களது சோம்பேறித்தனம் மற்றும் இறைவன் மீது நம்பிக்கை வைப்பது தொடர்பான தவறான கற்பனை ஆகியவற்றின் காரணமாக பலகீனத்திற்கு இரையாகின்றனர். எங்கு எதையாவது அவர்கள் செய்கின்றனரோ அங்கும் கூட தவறான அனுகுமுறை தான் அவர்களிடம் காண்படுகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் இவ்வாறு வருகின்றது. வஃபிஸ் ஸமாயி ரிஸ்க்கும் வமா துஅதூன். அதாவது வானத்தில் உங்களது ரிஸ்க்கும் இருக்கின்றது. எவை உங்களுக்கு வாக்களிக்கப்பட்டு இருக்கின்றதோ அவையும் உள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதைப் படித்து விட்டு அறிவற்ற ஒருவன் ஏமாற்றத்திற்கு ஆளாகின்றான். தொடர்ந்து முயற்சிகளை செய்வதை பொய்யானதாக கருதுகின்றான். அல்லாஹ் வானத்தில் உங்களுக்கு ரிஸ்க் இருக்கின்றது. அங்கு உங்களுக்கு வாக்களிக்கப்பட்டவை கிடைக்கும் என்று கூறியுள்ளான். எனவே நாம் எதையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. அல்லாஹ் தாமாகவே எல்லாவற்றையும் நமக்கு அனுப்பித் தருவான் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் அல்லாஹ் சூரா ஜுமுஆவில் கூறுகின்றான். அதாவது பூமியில் பரந்து சென்று இறைவனின் அருளைத் தேடுங்கள். எனவே இறைவனின் அருளைத் தேடுவது என்பது உழைப்பதே ஆகும். மேலும் தனது ஆற்றல்களை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**சிலர் தடுமாற்றம் அடைந்து காரணிகளை வணங்குபவர்களாக ஆகி விடுகின்றனர். சிலர் இறைவன் வழங்கியுள்ள ஆற்றல்களை முழுக்க முழுக்க பயனற்றதாக கருதுகின்றனர்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்கு செல்லும் போது அதற்கான ஆயத்தங்களை செய்து கொள்வார்கள். குதிரை, ஆயுதங்கள், தேவையான ஏனைய பொருட்களை எடுத்துச் செல்வார்கள். சில நேரங்களில் இரண்டு இரண்டு போர் கவசங்களை அணிந்தவாறு அவர்கள் சென்றார்கள். இடுப்பில் வாளையும் தொங்கவிட்டிருந்தார்கள். ஆனால் அல்லாஹ் அவர்களிடம் மக்களின் தாக்குதல்களிலிருந்து அல்லாஹ் உம்மை பாதுகாப்பாக வைப்பான் என வாக்களித்திருந்தான்.

எனவே திட்டங்கள் தீட்டுவதை முழுமைபடுத்திய பிறகு இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்றே கட்டளையிடப்பட்டுள்ளது. இவ்வாறே ஒவ்வொரு விவகாரத்திலும் உழைத்து விட்டு பிறகு இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இது இல்லாமல் இறைவனுடைய உதவி வராது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு இல்ஹாம் வந்துள்ளது. அரசர்கள் உமது ஆடைகளிலிருந்து அருள்களை தேடுவர். இதற்கு மிவுகம் ஒரு அழகான விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: **அரசர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஆடைகளிலிருந்து அருள்களைத் தேடுகின்ற அந்த காலம் வரும். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது**

**சஹாபாக்கள், தாபியீன்கள், தபா தாபியீன்கள் ஆகியோர்களிடமிருந்தும் அவர்களது தகுதிகளுக்கேற்ப அருள்கள் பெற்றுக் கொள்ளப்படும்.** எனவே நீங்கள் அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருங்கள். ஆற்றல் கிடைத்த பிறகு நீங்கள் ஒருபோதும் அநீதி இழைத்து விடக்கூடாது. எனவே நீங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதுடன் இஸ்திஃபாரும் செய்து வாருங்கள். உங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

இது மிகவும் அவசியமான விஷயமாகும். இன்று நாம் அமைதி, அமைதி என்று பேசுகின்றோம். சாந்தி பற்றிய விஷயங்களைக் கூறுகின்றோம். ஆனால் எல்லாம் கிடைத்து அரசர்கள் அஹ்மதிகளாக ஆவதற்கு முயற்சி செய்யும் போது அந்த சமயத்திலும் கூட அன்பு மற்றும் அமைதியின் போதனைகள் பரவ வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் இன்று நாம் பேசுவதும் கூட நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி நாம் பேசுகின்ற விஷயமாக ஆகிவிடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய அந்த இல்ஹாம் நிறைவேறுகின்ற அந்த நாட்கள் வெகு தொலைவில் இல்லை. நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து அருள்களை தேடும் போது தான் அரசர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஆடைகளிலிருந்து அருள்களை தேடுவர்.

அவர்கள் கூறினார்கள் : **நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து அருள்களை தேட ஆரம்பித்து விட்டால் பிறகு அல்லாஹ் எவ்வாறு அருள் செய்வான் என்றால் மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஆடைகளிலிருந்து அருள்களைத் தேடுவர்.** ஏனென்றால் தப்லீக் நடைபெறும். கருத்துக்கள் பரவும். அதன் காரணமாக மன்னர்கள் வருவர். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆடைகளிலிருந்து அருள்களை தேட முயற்சியும் செய்வர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நூல்கள் எவ்வாறு வெளியிடப்பட்டன என்பதைப் பற்றியும் நான் சில விஷயங்களை கூறுகின்றேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அதாவது எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நூல்களை எழுதக் கூடியவர்கள் பவுசு காட்டுவதை சகித்துக் கொண்டார்கள் என்பதை பற்றி அன்னார் கூறுகின்றார்கள். மேலும் எவ்வாறு புத்தகத்தின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தார்கள் என்பதை பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

சாதாரண எழுத்தர் மூலம் எழுதி மோசமான நூல் வெளியிடப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஏனென்றால், இதனால் நூலின் தரம் மக்களது பார்வையில் குறைந்து விடக்கூடாது என்று ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் விரும்பினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தமது நூல்களை அச்சிடுவதில் இருந்த குறிப்பான கவலை இருந்தது. மாற்று மதத்தவர்கள் மத்தியில் இஸ்லாத்தை தற்காத்துக் கொள்வதற்காகவும், அதன் அழகை எடுத்தக் காட்டுவதற்காகவும் முடிந்த வரை சிறந்த பொருளை நாம் கொடுக்க வேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள். அதைப் படிப்பவர்களது அறிவில் அதிகரிப்பு ஏற்படும் வகையில் இஸ்லாம் அழகிய வடிவில் அவர்களுக்கு முன்னால் காட்டப்பட வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள்.

எனவே **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய நூல்களை குறிப்பாக நாம் படிக்க வேண்டும். இதன் மூலமாகவே நமது மார்க்க அறிவு வளரும். இதன் மூலமாகவே தப்லீக்கிற்கான ஆர்வமும் நம்மிடம் ஏற்படும். நமது அறிவில் பரக்கத்தும் ஏற்படும். அதன் மூலம் உலகை இஸ்லாத்தின் கொடியின் கீழ் நாம் ஒன்று சேர்க்க முடியும்.** இளைஞர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் அரசர்கள் உமது ஆடைகளிலிருந்து அருள்களை தேடுவர் என்ற இல்ஹாமின் சரியான உண்மை வெளிப்படும். இதைப் பற்றி நாமும் புரிந்து கொள்வோம். அதன் மூலம் தப்லீக் செய்வதில் உயர்வான தரத்தை நாம் அடைந்து விடுவோம். அல்லாஹ் தஆலா இந்த விஷயத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்வதற்கான நற்பேற்றை வழங்குவானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஹுஸூர் அவர்கள் இரண்டு ஹாஜிர் ஜனாஸா மற்றும் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். முதலாவது ஜனாஸா சவுத்ரி அப்துல் அஸீஸ் டோகர் சாஹிப் அவர்களுடையதாகும். இரண்டாவது ஜனாஸா இக்பால் நஸீம் பட் சாஹிபா அவர்களுடையதாகும். மூன்றாவது ஜனாஸா காயிப் தர்வேஷயான மதிப்பிற்குரிய குரைஷி ஷஃபி ஆபித் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சித்தீக்கா பேகம் அவர்களுடையதாகும். அவர்களைப் பற்றிய குறிப்புகள் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் அல்லாஹ் தஆலா மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக. இவர்களது சந்ததிகளுக்கும் சிறந்த பற்றுறுதியுடன் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக என்று ஹுஸூர் அவர்கள் துஆவும் செய்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 15.01.2016
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516